உங்களுடைய மேலான சிந்தனைக்கே விட்டுவிட்டு, இதை மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோதே, அவை உரிமை மீறிய செயல்கள் இதில் அடங்கியுள்ளன என்பது தெளிவாகிற காரணத்தால், பேரவை விதி 226—இன்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் இப்பிரச்சினையை ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக, உரிமைக் குழுவிற்கு நேரடியாக அனுப்பி வைக்கின்றேன்.

திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர். வெளியிலே இருக்கின்ற பத்திரிகைகள் சட்டமன்றத்தை விமாசிக்கின்றபோது நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கை என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அதே நேரத்தில் சட்டமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள்..

முற்பகல் 11.40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. காலையில் கொடுத்தது (குறுக்கீடு) உறுப்பினர்கள் மீது ஒரு பிரச்சினை என்கிறபொழுது நான் அந்த சம்பந்தப்பட்ட உறுப்பினரை நேரடியாக அழைக்கிறேன். (குறுக்கீடு) இல்லை; அழைத்துக் கேட்கிறேன். (குறுக்கீடு) இல்லை. அதை ஒரு மரபு வழியாக வைத்திருக்கிறோம். (குறுக்கீடு) கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை. அதை ஒரு மரபாக வைத்திருக்கிறோம். உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரே இங்கே ஒரு உறுப்பினர் மீது கொடுத்தார். அதுபற்றி என்னுடைய முடிவை எடுப்பதற்கு ஒரு மாதம் எடுத்துக் கொண்டேன். அந்த உறுப்பினரை ஒவ்வொரு முறையும் அழைத்து அழைத்துப் பேசி, உங்களுடைய கருத்து என்ன; எதிர்க்கட்சித் தலைவருடைய கருத்து என்ன என்று கேட்டு, அதற்குப் பிறகுதான் நான் முடிவு எடுத்தேன். ஆகவே, நீங்கள் அவசரப்பட வேண்டாம். காலையிலே கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நான் சில நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

4. அறிவிப்பு.

இந்திய முத்திரை (தமிழ்நாட்டு இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1992 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992 ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாட்டு இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.